உண்மையுள்ள பொறுப்பாளர்கள் இருந்தால் மட்டுமே இந்தப் பூமி தன்னுடைய அறுவடையைத் தொடரும்.

புனித 2 ஆம் ஜோன் போல்







**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா : 50: 5-9

திபா: 115: 1-6, 8-9

யாக்கோபு : 2: 14-18

மாற்கு 8: 27-35

குற்றவாளிகளுக்கும் உரோமை சட்டங்களை எதிர்க்கும் எவருக்கும் பயன்படுத்தப்பட்ட ஒரு தண்டனையாகும். இயேசு இந்த உருவகத்தைப் பயன்படுத்துவதை சீடர்களால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. இதுபோன்ற ஒரு சோகமான பாதையில் பயணம் செய்யும்படி இயேசு அவர்களிடமும் கேட்கிறார் என்று அவர்கள் பயந்திருக்கக் கூடும். கிறிஸ்துவர்களாகிய நாமும் கூட இயேசுவைப் பின்பற்றுவதில் நம் சிலுவையைச் சுமக்க வேண்டுமென்று பயப்படுகிறோம் அல்லவா?

இருந்தபோதும், “மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்” என்று சீடர்களைக் கேட்கும்போது நாம் சற்றே ஆறுதல் அடைகிறோம். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பேதுரு, இயேசுவே மெசியா என்று பறைசாற்றுகிறார். இயேசுவைப் பற்றிய உண்மையை போதுமான அளவு பேதுரு அறிந்திருந்திருந்தார். குணமளித்தல், இறந்தோரை உயிர்த்தெழச் செய்தது, கடலை அடக்கியது மற்றும் பல அருளடையாளங்கள். இருப்பினும் பேதுருவும் மற்ற சீடர்களும் கிறிஸ்து தங்களைக் காப்பாற்றுவார் என்று எதிர்ப்பார்த்திருந்தபோது, அவர்களுடைய சிலுவைகளைத் தூக்கிக்கொண்டு பின்செல்ல வேண்டுமென்று கூறியதும், அதிகாரத்திற்கும் மாட்சிக்கும் உரிய கடவுள் பலவீனம், தாழ்ச்சி மற்றும் சாந்தத்தின் கடவுளாக பார்க்கப்பட்டதும் இந்தக் கதையில் ஒரு முரண்பாடான திருப்பமாகும்.

நீங்களும் நானும் சுமக்கும் ‘சிலுவை’ நம்முடைய அன்றாட துன்பங்களிலும் வாழ்க்கைப் போராட்டங்களிலும் இருக்கிறது. நம்பிக்கையுடனும், துணிவுடனும் இந்தப் போராட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நம்முடைய நம்பிக்கை அதிகமாகிறது. துன்பம் இல்லையென்றால், தியாகங்களை அனுபவிக்கமுடியாது. தியாகங்கள் இல்லையென்றால் அங்கு அன்பு இல்லாமல் போய்விடும். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு இந்த நற்குணங்கள் தான் கிறிஸ்துவைப் போல நம்மை வடிவமைக்கும் நற்குணங்கள்.

சகோதர சகோதரிகளே, துணிவுடன் இருங்கள். சிலுவையின் மாட்சி நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் மாட்சிமிக்க உயிர்த்தெழுதல் ஆகும். இதை கிறிஸ்துவால் மட்டுமே வழங்கமுடியும். மேலும் நமது துன்பங்கள், தியாகம், மற்றும் கடவுள் மீதும் பிறர்மீதும் வைக்கும் அன்பு ஆகியவற்றால் மட்டுமே இது சாத்தியமாகும்.

நம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவை அனுதினமும் பின்தொடர்வோம். ❖

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEW WAY OF BEING CHURCH

# newbec

15 செப்டம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 24 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் மண்ணுலகின் அழுகுரலைக் கேட்டல்

# மாட்சியை நோக்கி கிறிஸ்துவைப் பின்பற்றுதல்



Image: pinterest.com

இறைவன் வாழ்க்கையில் ஒரு கடினமான இரகசியத்தை முன்வைக்கிறார். “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” எளிதான, சுய பாதுகாப்பான பாதையைவிட பாதிப்பு மற்றும் பிறருக்கான அன்பைத் தேர்ந்தெடுக்கும்படி இறைவன் நம்மைக் கேட்பது போலாகும்.

இயேசு தாம் எவ்வாறு கொல்லப்பட்டு, உயிர்த்து எழுப்பப்படுவார் என்பதைப் பற்றி சீடர்களுக்குச் சொன்னபிறது தான் ‘சிலுவை’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் என்பதை இங்கு நாம் நினைவுகூருவோம். சிலுவை என்பது பொதுவான